தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 22, பிரமோதூத— திருவள்ளுவர் ஆண்டு 2021

1990 மே 5, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்”.

அசைவற்ற தெளிந்த அறிவினை உடையவர் துன்பத்தில் சிக்குண்டாலும், அத்துன்பத்தைத் தீர்ப்பதற்காகக் கூட இழிவான செயல்களைச் செய்யமாட்டார்.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தொழில் துறையில் பின்தங்கிய பகுதி

360. திரு. கே. சுந்தர் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உத்திரமேரூர் தொகுதியில் அடங்கியுள்ள ஊராட்சி ஒன்றியங்களைத் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளாக அறிவித்து அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உத்திரமேரூர் தொகுதி உத்திரமேரூர் வட்டம் மற்றும் காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தைஉள்ளடக்கியதாகும், உத்திரமேரூர் வட்டம் காஞ்சிபுரம் வட்டம் ஆகிய இரண்டு வட்டங்களும் தொழிலில்

பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் உத்திரமேரூர் தொகுதியில் அடங்கியுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்தும் தொழிலில் பின்தங்கிய பகுதியாக ஆகிறது.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்துறையிலே பின் தங்கிய, மிகவும் பின் தங்கிய வட்டங்களை நம்முடைய அரசு அறிவித்ததற்குப் பின்னால் அந்தப் பகுதிகளில் தனியார் தொழில் தொடங்க முன் வந்துள்ளார்களா? அந்த வகையில் எத்தனை பேர் அரசிற்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தில் இதுகுறித்து மிக விவரமாக விளக்கம் தரப்பட்டு இருக்கிறது. எனவே, அந்த பதிலை ஒரு முறை எடுத்துப்பார்த்தாலே அந்த வினாவுக்கு ஏற்ற விடை கிடைக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் துறையில் பின் தங்கியதாக அறிவிக்கப்பட்ட வட்டங்களில் ஏற்கெனவே, நீண்ட காலமாக வடாற்காடு- அம்பேத்கார் மாவட்டம் குடியாத்தம் வட்டத்தை பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வந்தது. இப்போதாகிலும், காட்பாடி தொகுதியை உட்பட்ட குடியாத்தம் வட்டத்தை.... (மணியடிக்கப்பெற்றது)

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் வட்டம் ஒவ்வொரு ஆண்டும் வறட்சியால் பாதிக்கப்படுகின்ற வட்டம். ஏரிகள் அதிகம் நிறைந்த வட்டமாக இருக்கின்ற அந்த உத்திரமேரூர் வட்டத்தில் கடந்த 10, 15 ஆண்டுகளாக ஏரிக்கு நீர் வரத்தே இல்லாமல் மிகவும் வறண்டிருக்கிற காரணத்தால், அதை மிகவும் பிற்படுத்தப்பட்ட வட்டமாக அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இதற்குத் தொடர்பில்லாத கேள்வி, இருந்தாலும்கூட, பின் தங்கிய வட்டங்கள், மிகப் பின்தங்கிய வட்டங்கள் என்பதற்குச் சில தகுதி அடிப்படைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பின்தங்கிய பகுதியாக அறிவிப்பதற்கு, குறிப்பிட்ட வட்டத்தின் மொத்த மக்கள் தொகையில் ஆலைத் தொழிலாளர்களின் சராசரி விகிதம், மாநில சராசரி விகிதமான 1.26-க்குக் கீழ் இருத்தல் வேண்டும். இந்த வட்டத்தில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களில் செய்யப்பட்டுள்ள முதலீடு ரூ. 15 கோடிக்குள் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. இந்தத் தகுதியின் அடிப்படையிலேதான் பின்தங்கிய வட்டங்கள் பிரித்து அறி

விக்கப்பட்டுள்ளன. இந்தத் தகுதிகள் கூட இல்லாத வட்டங்கள் தான் மிகப் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்படுகின்றன. நான் குறிப்பிட்ட இந்தத் தகுதிகள் ஒரு வேளை உறுப்பினர் சொல்கின்ற அந்தப் பகுதிக்கு இல்லாமல் இருக்குமேயானால், அதைப் பின்தங்கிய பகுதியாகச் சேர்க்க இயலும், இல்லாவிட்டால் இயலாது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் கொடுத்த விளக்கம் தெளிவாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே ஒரு நாள் எனக்குச் சொன்ன சாத்தான் குளத்தில் விழமாட்டான், என்பதை எனக்கு விளக்கிச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விழ மாட்டான்; விழுந்தவன் அடிக்கடி எழுந்திருக்கிறான். (சிரிப்பு).

தீயணைக்கும் படையில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் குடியிருப்புகள்.

* 3189. **திரு. என். பழனிவேல் :**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் தீயணைக்கும் படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்,

(ஆ) தமிழ்நாட்டில் தற்போதுள்ள 187 தீயணைப்பு நிலையங்களில் சுமார் 85 தீயணைப்பு நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்குடன் மத்திய அரசின் 9-வது நிதிக் குழுவுக்கு ரூ. 14.70 கோடி நிதியுதவி கேட்டு பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது. அந்த உதவி கிடைக்குமேயானால், குடியிருப்புகள் கட்டத் தேவை